# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 01–ஆம் நாள், சனிக்கிழமை

## இ.ம.எண்.2/2024 இன் அ.வ.எண்.170/2015

## CNR No. TNSA13-000094-2015

விருதாம்பாள் . . . மனுதாரர்/15 ம் பிரதிவாதி

/எதிராக/

விஜய் . . . எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவின் மீதான விசாரணையானது, 01.11.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்/15 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.மோகனசுந்தரம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.தனபால் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்/15 ம் பிரதிவாதி இம்மனுவுடன் தாக்கல் செய்யும் கூடுதல் பதிலுரையை ஏற்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

II. **மனுதாரர்/15 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :**

மனுதாரர் மேற்படி வழக்கில் 15 ம் பிரதிவாதி என்றும், வழக்கானது

எதிர்மனுதாரர்/வாதியால் பாகப்பிரிவினை, தனித்த சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கில் மனுதாரர்/15ம் பிரதிவாதி ஏற்கனவே பதிலுரை தாக்கல் செய்துள்ளதாகவும், பதிலுரையில் சில முக்கியமான சங்கதிகள் விடுபட்டுவிட்டதாகவும், மேற்படி தாவா தவறானது மற்றும் பொய்யானது என்பதை நிரூபணம் செய்ய வேண்டி கூடுதல் பதிலுரை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி கூடுதல் பதிலுரையை ஏற்க வேண்டியது அவசியம் என்றும், எனவே இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையை ஏற்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

III. <u>எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்யும் எதிருரையின் சுருக்கம் :</u>

எதிர்மனுதாரர் இம்மனுவில் உள்ள சங்கதிகளில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார். ச.எண்.9/4ல் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 3.84 செண்ட் இதில் வீரமுத்து படையாச்சி மகன் தங்கராஜ் மற்றும் வில்வராஜ் ஆகியோர்களுக்கு ஏக்கர் 1.91 செண்ட் நிலம் பட்டாப்படி பாத்தியப்பட்டது என்றும், மேற்படி தங்கராஜ் வாதியின் தகப்பனார் சுந்தரராஜனுக்கு 27.07.1978 தேதியிட்ட ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரப்படி ஏக்கர் 1.41 செண்ட் நிலத்தை விற்பனை செய்துள்ளதாகவும், மேலும் 30.09.1978 ல் மேற்படி தங்கராஜ் எதிர்மனுதாரர்/வாதியின் பாட்டனார் ராமசாமிக்கு 0.05 செண்ட் நிலத்தை விற்பனை செய்துள்ளதாகவும், மேற்படி ஏக்கர் 1.91 செண்ட் நிலத்தில் இந்த எதிர்மனுதாரரின் தகப்பனார் சுந்தரராஜனுக்கும், பாட்டானாருக்கும் மொத்தம் ஏக்கர் 1.46 செண்ட் நிலம் பாத்தியப்பட்டதாகவும், இதில் மீதமுள்ள 0.45 செண்ட் நிலத்தை மனுதாரரின் தகப்பனார் நடேசன் வில்வராஜிடமிருந்து 28.09.1978 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரப்படி கிரையம் பெற்றுள்ளதாகவும், மேற்படி உண்மை சங்கதிகளை மறைத்து மனுதாரர் தனது கூடுதல் பதிலுரையை தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல.

மேலும் மேற்படி சர்வே எண், 9/4 ல் மனுதாரரின் தகப்பனார் நடேசன், ராஜாராம் வகையறாவிடம் இருந்து 15.07.1976 ம் தேதி ஏக்கர் 1.08 செண்ட் நிலத்தையும், 28.12.1977 ல் மனுதாரரின் தாயார் 0.85 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளதாகவும், வீரமுத்து படையாச்சி மகன் தங்கராசு மற்றும் வில்வராஜ் ஆகியோர்களுக்கு சர்வே எண். 9/4 ல் ஏக்கர் 1.91 செண்ட் நிலமும், ராஜாராம், திரிசங்குராஜன் வகையறாக்களுக்கு ஏக்கர் 1.93 செண்ட் நிலமும் ஆக மொத்தம் ஏக்கர் 3.84 செண்ட் நிலம் மேற்படி சர்வே எண்ணில் உள்ளதாக வில்லங்க சான்றிதழில் உள்ளது எனவும், இந்நிலையில் மனுதாரரின் தகப்பனார் ஒரு ஆறுமுக படையாச்சிக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் நிலத்தை சேலம் சார்பு நீதிமன்ற அபீசியல் ரிசீவர் மூலம் சர்வே எண். 9/4–ல் கண்டுள்ள ஏக்கர் 3.84 செண்ட் நிலத்தை 1/3 பாகம் ஒரு ஆறுமுக படையாச்சி என்பவருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லி மேற்படி ஆறுமுக படையாச்சி திவால் ஆகிவிட்டதாக நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அபீசியல் ரிசீவர் மூலம் மனுதாரரின் தகப்பனார் கிரையம் பெற்றதாக சொல்லி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 82/2012 தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் சுவாதீனம் பெறப்படாத சொத்தை சுவாதீனம் எடுத்து தர சொல்லி வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

மனுதாரரின் தகப்பனாரும், தாயாரும் கிரையம் பெற்ற சொத்தையே பின்னிட்டு கிரையம் பெற்றதாக சொல்லி சர்வே எண்.9/4 ல் முழு சொத்தும் அவர்களுக்கு பாத்தியப்பட்டதாகவும், பின்னிட்டு தற்சமயம் ஏக்கர் 2.58 செண்ட் நிலம் நீங்கலாக எதிர்மனுதாரரின் வழக்கை தீர்ப்பளிப்பதில் ஆட்சேபணை இல்லை என்று ஒரு கூடுதல் எழுந்துமூல விபரப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளது சட்டத்திற்கு எதிரானது என்றும், மேற்படி மனுதாரரின் சார்பதிவாளர் அலுவலக பதிவுகளின்படி மனுதாரரின் குடும்பத்திற்கு மொத்தம் ஏக்கர் 2.38 செண்ட் நிலம் பாத்தியப்பட்டது என்றும், இந்த எதிர்மனுதாருக்கு ஏக்கள் 1.46 செண்ட் நிலம் பாத்தியப்பட்டதாகவும், ஆக மொத்தம் 9/4 ல் ஏக்கர் 3.84 செண்ட் நிலம் மேற்கண்டவாறு பாத்தியப்பட்ட நிலையில் மேற்படி ஆவணங்களுக்கு ஏதிராக தனக்கு உரிமையில்லாத

சொத்தையும் சேர்த்து ஏக்கர் 2.38 செண்ட் நிலத்திற்கு பதிலாக ஏக்கர் 2.58 செண்ட் நிலம் தனக்கு பாத்தியம் என்று கோரி வழக்கை நடத்தி வரும் மனுதாரரின் செய்கைகள் ஏற்கத்தக்கதல்ல.

மேலும் ஏதோ 1976 ஆம் ஆண்டு அபீசியல் ரிசீவர் மூலம் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் சொத்தின் உரிமையாளர் ஆறுமுக படையாச்சிக்கும் எந்தவொரு உரிமையும் இல்லை. சொத்தின் உரிமையாளர் அல்லாத ஒரு நபரின் சொத்தை உரிமையாளர் என்று சொல்லி அச்சொத்தை கிரையம் பெற்றதாக சொல்லும் மனுதாரரின் செயல்பாடுகள் அனைத்தும் கற்பனையில் விளைந்த பொய்யான சங்கதிகள் ஆகும். 1976 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சொத்தின் சுவாதீனமே கைமாறாத நிலையில், சொத்தின் சுவாதீனத்தை எடுத்து தர சொல்லி வழக்கை தாக்கல் செய்துள்ள மனுதாரரின் வழக்கு காலவரையறை தோசத்தால் பாதிக்கப்பட்ட ஒன்று எனவும், மேற்படி வழக்கில் இந்த எதிர்மனுதாரரோ அல்லது மற்றவர்களோ தரப்பினர்கள் இல்லை என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**IV. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.**

V. மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை, தனித்த சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கானது 2015 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு இதுவரை விசாரணை தொடங்கப்படாத நிலையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்/15 ம் பிரதிவாதி தனது கூடுதல் பதிலுரையை ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். வழக்கு ஆவணங்களையும், மனுவையும் ஆராய்ந்து பார்க்கையில் மனுதாரர் தரப்பில் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய மனுதாரர்/15 ம் பிரதிவாதிக்கு வாய்ப்பு அளிப்பது அவசியம்

என்பதாலும், இதனால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

VI. **<u>தீர்வு :</u>**

இறுதியாக இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, நவம்பர், 1–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.01 18:52:20 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.01 18:52:47 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>சகூ.மா.உ.நீ., ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண்: 2/2024
அ.வ.எண்.170/2015
நாள் : 01.11.2025